செய்தி வெளியீடு எண்:340 நாள் : 12.07.2016

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்பேரில் இன்று (12.07.2016) மாண்புமிகு கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி அவர்கள் காஞ்சிபுரம் மாவட்டம், காட்டாங்குளத்தூர் அருகிலுள்ள காட்டுப்பாக்கம் கோழிப் பண்ணையினை நேரில் ஆய்வு செய்தார்கள்.

காட்டுப்பாக்கம் கோழிப்பண்ணையானது கோழிவளர்ப்பிற்கு ஒரு முன்னோடி மாதிரி பண்ணையாக திகழ்கிறது. கோழி வளர்ப்பில் ஆர்வம் கொண்டுள்ள விவசாயிகளின் தேவையினை பூர்த்தி செய்ததுடன் கோழிவளர்ப்பு பணியில் நன்கு வளர்ச்சியை கண்டுள்ளது. வருடந்தோறும் பல பயனாளிகளும், பொது மக்களும் இப்பண்ணை மூலம் பயணடைந்து வருகின்றனர். இப்பண்ணையானது விவசாயிகள் எளிதில் வந்தடையும் விதத்தில் ஜி.எஸ்..டி சாலையில் 9.65 ஏக்கர் பரந்த நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

இப்பண்ணையில் குஞ்சு கோழிகள் பிரிவு, வளரும் கோழிகள் பிரிவு, முட்டையிடும் கோழி பிரிவு ஆகியவற்றை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, குஞ்சு பொரிப்பகத்தில் பொரிக்கப்படும் குஞ்சுகள் குறித்தும், வளரும் கோழிகள் பிரிவில் வளர்க்கப்படும் சேவல்கள் மற்றும் பெட்டை கோழிகள் இனவிருத்தி குறித்தும் முட்டையிடும் கோழி இனங்களான கிரிராஜா, வனராஜா, வெள்ளை லெக்கான், வான்கோழி ஆகிய கோழிகளை பற்றி கேட்டறிந்தார். மேலும் இப்பண்ணையில் அமைக்கப்பட்டுள்ள தீவன அரவை இயந்திர செயல்பாடுகளை ஆய்வு செய்தார். தற்சமயம் தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகத்திலிருந்து கோழிகளுக்கான அனைத்து தீவனங்களும் வாங்கப்படுகின்றன. இதனை கருத்தில் கொண்டு இனி வருங்காலங்களில் தீவனத்தை இப்பண்ணையிலேயே உற்பத்தி மேற்கொள்ளப்படும் என்று கால்நடை அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும் கோழிகள் இடும் முட்டைகளை சேகரித்து குஞ்சு பொரிப்பதற்கு பயன்படுத்தி கோழி இன விருத்திக்கு உதவுமாறும் மற்றும் அப்பண்ணையினை மேலும் உயர்த்திட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

மேலும் அருகிலுள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்லுள்ள கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தினை நேரில் ஆய்வு செய்து பசுபண்ணை, பன்றி இனவிருத்தி பண்ணை முயல் இனவிருத்தி பிரிவு, நெருப்பு கோழி இனவிருத்தி ஆகிய பிரிவுகளை பார்வையிட்டு கால்நடைகள் வளர்க்கப்படும் விதத்தினை பற்றி கேட்டறிந்தார். கால்நடை தீவன உற்பத்தி நிலைய பணிகளை ஆய்வு செய்த போது கொள்ளு, கோதுமை தவிடு, அரிசி தவிடு, மக்காசோளம், ஆலிவிதைகள்,கிளிஞ்சல்கள், சோயா பிண்ணாக்கு, கருவாடு, மற்றும் சூரியகாந்தி பிண்ணாக்கு ஆகிய மூலபொருள்களை பயன்படுத்தி கறவை மாட்டு தீவனம், முட்டை கோழி தீவனம், ஆகிய தீவனஙள் தயாரிக்கப்படுவது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு பல்கலைக்கழக அதிகாரிகள் விளக்கினார்கள்.

இந்த ஆய்வின் போது காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. மரகதம் குமாரவேல் அவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் துறை உயர் அதிகாரிகள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**